**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**17 |
| Name | : | **சித்ரா** |
| Husband Name | : | **தீனதயாளன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 46/2025 |

**தேதி : 15.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி எனக்கு ஏற்கெனவே தனியார் நிதிநிறுவனத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சென்றபோது அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்க சொன்னார்கள். சத்தியா என்பவர் புகார் அளித்தார். மேற்படி கடன் பெற்றதற்கான ஆவணங்கள் அனைத்தும் எதிரியிடமே உள்ளது. போலீஸார் என்னை விசாரித்தார்கள். கடன் வாங்கிகொடுத்துள்ளார். அந்த வகையில் எதிரியுடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. எதிரி தனது குடும்பத்தினரின் மருத்துவ செலவிற்காகவும், குடும்ப செலவிற்காகவும் என்னிடம் லோன் வாங்கிதரசொன்னார். மேலும், தவணை தொகைகளை தானே முறையாக செலுத்திவிடுவதாக கூறியதன்பேரில் ரூ.1,82,600/- மண்ணச்சநல்லூர் Equtios, துறையூரில் உள்ள ஆசிர்வாத், பெரம்பலூரில் உள்ள மற்றொரு தனியார் பைனான்ஸ் இருந்து வாங்கிகொடுத்தேன். மேற்படி கடனுக்கான சில

தவணைகள் மட்டும் செலுத்திவிட்டு எதிரி தலைமறைவாகிவிட்டார். மேற்கொண்டு தவணை தொகைகளை திரும்பகாவல் நிலையத்திற்கு சென்றபோது அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்க சொன்னார்கள். சத்தியா என்பவர் புகார் அளித்தார். மேற்படி கடன் பெற்றதற்கான ஆவணங்கள் அனைத்தும் எதிரியிடமே உள்ளது. போலீஸார் என்னை விசாரித்தார்கள். செலுத்த சொல்லி நிதிநிறுவன ஊழியர்கள் என்னிடம் கேட்டபோது அவரை பற்றி விசாரித்தேன்.

அவரை பற்றி சரியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆதலால் இது சம்மந்தமாக புகார் அளிக்க பாடாலூர் ்காவல் நிலையத்திற்கு சென்றபோது அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்க சொன்னார்கள். சத்தியா என்பவர் புகார் அளித்தார். மேற்படி கடன் பெற்றதற்கான ஆவணங்கள் அனைத்தும் எதிரியிடமே உள்ளது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி எனக்கு 11 வருடமாக பழக்கம். 11 வருடமாக லோன் வாங்கி கொடுத்த வகையில் எனக்கு பழக்கம்.எதிரிதான் என்னை அறிமுகப்படுத்தி லோன் வாங்கி கொடுத்தார். எதிரி என்னிடம் இதுவரை மூன்று, நான்கு லோன்கள் வாங்கியுள்ளார். ஒரு லோன் கட்டியுள்ளார். மீதமுள்ள மூன்று லோன்கள் கட்டவில்லை. எதிரி ஊரில் இருந்தவரை தவணை தொகைககளை கட்டினார். ஊரைவிட்டு போனபிறகு நான் தவணை தொகைகளை கட்டிவருகிறேன். நாங்கள் 40 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியைதான் நிதி நிறுவன ஊழியர்கள் தவணைகளை

கட்ட சொல்லி கேட்டார்கள். எதிரி தலைமறைவானபிறகு நான் தவணை தொகைகளை செலுத்தி வருகிறேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.